1970 ஏப்ரல் 3]

எடுத்தார்கள். அந்த நிலச்சுவான்தாரர் ஆட்சேபித்தார் என்பதற்காக திரும்பவும் வேறு ஒரு இடம் எடுத்தார்கள். அது முன்பு இருந்த இடத்தைவிட பள்ளமானது என்பதனால் அரிசன மக்கள் வேண்டாம் என்றார்கள். திரும்பவும் எடுத்த இடம் பரியல் க்ரவுண்டாக இருந்த காரணத்தினால் அதற்கு அப்பால் வேறு ஒரு இடத்தை எடுக்கச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி போடவேண்டும். விளக்கம் தேவையில்லை, கேள்வி என்ன? துணைக் கேள்விகள் எத்தனை கேள்விகள் போடுவது? கேள்விகள். அதுவும் துணைக் கேள்விகள், கேட்கின்ற நேரத்திலே அங்கே நடந்திருக்கின்ற அத்தனை நிகழ்ச்சிகளையும்பற்றிச் சொல்வதற்காகப் பயன்படுத்தக்கூடாது. குறிப்பிட்ட கேள்வியைப்பற்றி மட்டும் சுருக்கமாகக் கேட்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: முதலிலே குறிப்பிடப்பட்ட வரக்கால்பட்டு கிராமத்திலே கொடுக்கப்பட்ட நிலங்கள் பற்றி ஒரு குறையும் இல்லை. இருந்தாலும் அவர்கள் போக மறுத்தார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட தேவன்குடி கிராமத்தினைப் பொறுத்தவரையில் கனம் கோவிந்தராசன் அவர்களே ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அவர்கள் கூறியது நியாயமற்றது என்று நாம் மீண்டும் புனர் பரிசீலனை செய்துவிட்டுத் தெரிவித்தோம். அந்த இடத்தையும் மறுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் போன்றவர்கள் ஒத்துழைத்தால் அந்த இடத்தை எடுத்துக் கொடுப்பதில் காலதாமதமோ வழக்கோ ஏற்படாது.

திருமயம் வட்டத்திலுள்ள அரிசன குடியிருப்புகள்

*663 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள, திருமயம் வட்டத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள அரிசனக் காலனிகளில் குடியிருக்க முடியாமல் இடிந்து போனவை எத்தனை? எங்கெங்கே?

(இ) அவற்றைச் சீர்படுத்திக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) மேலதானியம் கிராமத்திலுள்ள ஒரு குடியிருப்பில் ஆறு வீடுகள் இடிந்து போய்விட்டன.

(இ) இதற்கான கோரிக்கை எதுவும் அக்குடியிருப்பு வாசிகளிடமிருந்து வரவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசு ஆட்சி செய்த நேரத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட அரிசனக் காலனிகள் உள்ள வீடுகள் இடிந்திருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன? காலனியில் உள்ள வீடுகளைக் கட்டியவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கடந்த காலத்தில் கட்டப்பட்ட வீடுகளில் சில வீடுகள் இடிந்துவிட்டதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. அதற்காக யார்மீதும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்கவில்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை அரிசன மக்களேதான் பாதுகாக்க வேண்டும். வீடுகளைச் செப்பனிடுவதுகூட அவர்களுக்குப் பொறுப்பில்லாமல் அதைக்கூட அரசாங்கமே செய்து கொடுக்கின்ற நிலையில்லை. ரிப்பேர் செய்துகொடுப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இல்லை. கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைப் பாதுகாத்துக் கொள்வது அவர்களுடைய பொறுப்பாகும்.

Loans given to agriculturists in Krishnagiri taluk.

* 664 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state the amount given as loan to agriculturists under the package scheme of A.D.T. 27 paddy in Krishnagiri taluk in Dharmapuri district in the year 1967–68 and the paddy yield increase consequently?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மும்முரமாவிடும் திட்டத்தின் கீழ் நெல் பயிரிட 1967-68-ம் ஆண்டில் கிருஷ்ணகிரி வட்டத்திற்கு ரூ. 11,00,000 பிரித்துக் கொடுக்கப்பட்டது. ஆடுதுறை மற்றும் ஏனைய நெல் ரகங்களைப் பயிரிட ரூ. 8.97 லட்சம் வரை தருமபுரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி கடனாகவும் கொடுத்தது.

2. கடன் வழங்கியதன் மூலம் ஆடுதுறை 27 நெற்பயிர் முதல் போகத்தில் மொத்த உற்பத்தி அதிகரிப்பு 2,500 டன் என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் மதிப்பிடப்பட்டது. இந்தப் பகுதியில் மழை பெய்ததன் காரணமாக, இரண்டாம் போகம் விளையவில்லை.

THIRU B. VENKATASWAMY: Is it not a fact that 50 per cent of the poduction was decreased in Krishnagiri project area in 1967–68 because peasants were forced to plant ADT 27 where ADT 27 is not suited to that area since it contained more alkalinity? If so, may I know the 'value loss' that occurred to the ryot due to the ADT 27 plantation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படி ஏதுவும் இருப்பதாக அரசாங்கத்திடம் எந்தவிதமான குறிப்பும் இல்லை.